HSE - OCT - 2012

www.kalvisolai.com

**1610**

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

( உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன் )

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : 3 × 4 = 12

1. தமிழ் உயர்மொழி, தனிமொழி என்று உரைக்கப்படக் காரணங்கள் யாவை ?

2. நமது நாட்டில் நீண்டகாலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு. வி. க. வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

3. கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம் ?

4. நம் முன்னோர்கள் நனிநாகரீகராய் விளங்கிய பான்மையை விளக்குக.

5. பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனை விளக்குக.

[ Turn over

www.kalvisolai.com



II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக :

3 × 4 = 12

6. மக்கள் நாகரீகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதனைப் பாவாணர் கூறுமாறு யாங்ஙனம் ?

7. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை ?

8. செல்வம் நிலைபேறு உடையதன்று - என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது ?

9. ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு. வ. காட்டும் வழிகள் யாவை ?

10. நாயக்கர் கால தந்தச் சிற்பக்கலை பற்றி வரைக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக :

1 × 6 = 6

11. நாடு, சமயம், சாதி இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபடுதல் தவறாம் என்று திரு. வி. க. வாதிடுவதனை விளக்குக.

12. நீதி கூறும் போதும் நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.

www.kalvisolai.com



IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக : 2 × 10 = 20

13. 'பால்வண்ணம் பிள்ளை' அல்லது 'சட்டை' என்னும் சிறுகதையின் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

அல்லது

'வேலி' அல்லது 'மகன்' என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'ஓர் உல்லாசப் பயணம்' அல்லது 'கிழிசல்' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

அல்லது

சொந்தவீடு கட்டிக்கொள்ளக் கடன் வாங்கி அல்லற்பட்ட இருவர் சந்தித்து உரையாடுவதுபோல் நும் கற்பனையில் ஒரு கட்டுரை வரைக.

அல்லது

மண் சிறுகதையில் வரும் 'சின்னத்தாய்' நன்றிமறவாப் பண்புடன் தன் வளர்ப்புத்தாயோடும் தந்தையோடும் இணைந்து வாழ்கிறாள். ஆதரவற்றோர் இல்லம் ஒன்றைத் தொடங்கி சேவை செய்வதைப் போன்று கற்பனைக் கதை எழுதுக.

[ Turn over

www.kalvisolai.com



V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 × 10 = 10

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ ? - இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ ?

– பாரதியார்

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. Without luck ability is nothing.

17. An artist lives everywhere.

18. Face is the index of the mind.

19. No smoke without fire.

20. Honesty is the best policy.

21. Ask not what your country has done for you; Ask what you have done for your country.

www.kalvisolai.com

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. 1 × 4 = 4

அ) "பேராசை பெரு நட்டம்"

ஆ) "சிறுதுளி பெருவெள்ளம்"

இ) "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு"

*அல்லது*

'*உழைப்பு*' அல்லது '*கடல்*' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்குக் குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

*குறிப்பு :* **காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா**

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் உகந்த விடையை எழுதுக. 5 × 2 = 10

எது நேர்ந்தாலும் சத்தியத்திலிருந்து ஒரு அங்குலம் கூட எவன் விலகுவதில்லையோ அவனே உண்மையான மனிதன். இந்த உண்மைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறீர்களா ? உங்களிடம் அந்த உறுதி இருக்கிறதா ? உங்களிடம் இந்த நம்பிக்கை இருந்தால் நீங்கள் ஒவ்வொருவரும் மற்றவர்கள் வியக்கின்ற செயல்களைச் செய்வீர்கள். நீங்கள் செய்தித்தாள்களில் எழுத வேண்டியதில்லை.

[ Turn over

www.kalvisolai.com



மேடைகள் தோறும் அதை சொற்பொழிவாற்ற வேண்டியதில்லை. உங்களுடைய முகத்திலேயே அது ஒளிவீசும். இத்தகைய நிலையோடு ஒரு குகைக்குள் நீங்கள் வாழ்ந்தாலும் உங்கள் சிந்தனைகள் மலைகளை ஊடுருவி உலகம் முழுவதும் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வானவெளியில் அதைச் செயல்படுத்துகின்ற சில மூளைகளில் போய்ச் சேருகின்ற வரை சென்று கொண்டிருக்கும். உண்மையான தூய்மையான லட்சியத்தை நினைக்கின்ற ஆற்றலுக்கு எல்லையில்லா சக்தியுண்டு என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

*வினாக்கள் :*

16. உண்மையான மனிதன் யார் ?

17. மற்றவர்கள் வியக்கும் செயல்களைச் செய்பவர்கள் யாவர் ?

18. உங்கள் செயல்களை விளம்பரம் செய்ய வேண்டாம் என்று விவேகானந்தர் கூறக் காரணம் என்ன ?

19. உங்கள் செயல்திறன் எங்கே ஒளி வீசும் ?

20. உங்கள் சிந்தனை எதை ஊடுருவிச் செல்லும் ?

21. தூய்மையான சிந்தனை எவ்வளவு தூரம் செல்லும் ?

22. தூய்மையான ஆற்றலுக்கு உள்ள சக்தி என்ன ?

www.kalvisolai.com



VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக : 10 × 1 = 10

23. சில வீரர் நாட்டிற்காகத் தன் இன்னுயிர் ஈந்தனர்.

( தொடரில் உள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. 'செல்வ சிறுமீர்காள் ! நீராட போதுவீர்' என்றாள் கோதை.

( ஏற்ற இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. கல்விக் கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளைப் புரிந்துப் பேசுவர்.

( தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

26. எல்லா கவர்மெண்ட் பைல்களும் சி.எம். பார்வைக்கு அனுப்பப்படும்.

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக )

27. மயில் கூவ குயில் அகவ காகம் கத்தியது.

( மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக )

28. குலத்தில் தாமைறப்பூவும் அள்ளிப்பூவும் அளகாய்ப் பூக்கும்.

( தொடரில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக )

29. 'கிலி' - 'கிளி' அல்லது 'இலை' - 'இளை'

( சொற்களின் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக )

www.kalvisolai.com



30. குளந்த ஏன் அளுவுறா ?

( கொச்சையான வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக )

31. கோவில் கர்ப்பகிரஹத்துக்குள் யாரும் பிரவேசிக்கக்கூடாது.

( வடசொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக )

32. சமயத்தை மதம் என்றும் குறிப்பிடுவர் மதம் என்பதற்குக் கொள்கையில் நிற்றல் என்பது பொருள்

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).

---